# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2013 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2013.06.03 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம்

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (வண) அதுரலியே ரதன தேரர் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப் பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கை மக்களின் சுயாதீனத்திற்கு மாறான விதமாக இலங்கை ஜனாதிபதி மற்றும் இந்தியப் பிரதமர் ஆகியோர்களுக்கிடையில் 1987 ஆம் வருடத்தில் கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற பலாத்காரம் காரணமாக பொய்யான 13 ஆம் அரசியல் அமைப்புத் திருத்தம் சட்டமாக்கப்பட்டபடியினாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஒன்பது பேர்கள் கொண்ட நீதிபதிகள் குழுவொன்றினது நான்கு பேர்கள் மாத்திரம் 13 ஆம் அரசியல் அமைப்புச் சட்டத் திருத்த வரைவுச் சட்டத்தினை மக்களால், மக்கள் விருப்பு வாக்கு எடுப்பொன்று மூலம் அங்கீகரித்தல் தேவையற்றது எனத் தீர்ப்பு வழங்கியிருக்கும்போது அதே நீதிபதிகள் குழாத்தினர்களின் ஐந்து நீதிபதிகள் அந்த வரைவுச் சட்டம் அல்லது அந்த வரைவுச் சட்டத்தின் ஏதேனுமொரு ஏற்பாடு காரணமாக அரசியல் அமைப்பு மீறப்படுகின்றது என்பதன் காரணத்தினால் மக்கள் விருப்பு வாக்கெடுப்பின்மூலம் மக்களினது அங்கீகாரம் பெறப்படல் அவசியமானது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதன் காரணத்தினாலும் ;

ஏதேனும் சட்டமூலம் அல்லது அதன் ஏற்பாடுகள் சட்டமாக்கு வதற்கு மக்கள் விருப்பு வாக்கெடுப்பின் மூலம் மக்களினது அங்கீகாரம் செயற்படல் அவசியமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கும் நிலையில் அரசியலமைப்புச் சட்டத்தின் 80 (2) உறுப்புரையின் பிரகாரம் குறித்த அந்த வரைவுச் சட்டம் அல்லது குறித்த அந்த ஏற்பாடுகள் சட்ட அந்தஸ்தினைப் பெறுவது அவ்வாறானதொரு மக்கள் விருப்பு வாக்கெடுப் பொன்றின் மூலம் மக்களால் அங்கீகரிக்கப்பட்டது என ஜனாதிபதியவர்களினால் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னராகும் என்பதனாலும் ;

குறித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழாத்தினர்களுள் பெரும்பான்மையினர்கள் அந்த சட்டமூலம் அல்லது அதன் ஏதேனும் ஒரு ஏற்பாடு அல்லது ஏற்பாடுகள் மக்கள் விருப்பு

2-PL 007291 -200 (2013/05)

வாக்கெடுப்பொன்று மூலமாக பொதுமக்களினால் அங்கீகரிக்கப் படல் வேண்டுமெனத் தீர்ப்பளித்துள்ள காரணத்தினால் அந்தச் சட்ட வரைவு, சட்ட அந்தஸ்தினைப் பெறுவது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 80 (2) உறுப்புரையின் பிரகாரம் மக்கள் விருப்பு வாக் கெடுப்பு ஒன்றின் மூலம் பொது மக்களினால் அங்கீகரிக்கப்பட் டால் மாத்திரமாகும் என்பதனால் குறித்த அந்த சட்ட வரைவு உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்டதென அரசியல் அமைப்புச் சட்டம் 79 மற்றும் 80(1) உறுப்புரைகளின் பிரகாரம் சபாநாயகர் அவர்களினால் வழங்கப்பட்ட பொய்யான உறுதியுரை செல்லுபடியற்றது, அத்துடன் அரசியல் அமைப்பிற்கு விரோத மானது என்பதனாலும் ;

ஏதேனுமொரு சட்டமூலம் அல்லது அதன் ஏற்பாடொன்று சட்டமாக்கப்படுவதற்கெனின் மக்கள் விருப்பு வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் பொதுமக்களின் அங்கீகாரம் பெறப்படல் அவசிய மானதென உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கும் போது சட்ட ரீதியாக எடுக்க முடியுமான ஒரேயொரு வழிமுறை என்னவெனில் அரசியல் அமைப்பின் 80(2) உறுப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் மாத்திரமாகும். எனினும், உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றில்லாது குறித்த அந்த வரைவுச் சட்டம் 154ஏ(2)(ஆ) மற்றும் 154ஏ(3)(ஆ) உறுப்புரைகளுக்கும் பாராளுமன்றத்தில் மேற்கொள் ளப்பட்ட பொய்யான திருத்தங்கள் அரசியல் அமைப்பிற்கு விரோதமானது அத்துடன் சட்ட விரோதமானது என்பதனாலும்;

வடக்கு, கிழக்கு மாகாணம் தனியொரு இனத்தினர்களுக்கு அல்லது மொழிபேசுகின்ற மக்கள் கூட்டத்தின் நிஜபூமியாகும் என்று பிரிவினைவாதச் சக்திகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பிழையான மற்றும் உண்மைக்குப் புறம்பான பிரசாரங் களை அடிப்படையாகக்கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்க ளுக்கு தனியொரு மாகாணசபை கொண்ட தனியானதொரு நிர்வாக அலகின் கீழ் கொண்டு வருவதற்கு அப்போதிருந்த ஜனாதிபதி அவர்களினால் இந்திய-இலங்கை ஒப்பந்தம் பெற்றுக்கொடுத்த சட்ட விரோதமான பொருத்தத்தின்படி 13ஆம் திருத்தம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 154(அ)(3) பிரிவு மூலமாக அண்மித்த இரண்டு மாகாணங்களுக்கு அல்லது மூன்றிற்கு தனியொரு மாகாணம் கொண்ட தனியானதொரு நிருவாக அலகொன்றாக அமையக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக் கின்ற காரணத்தினாலும் ;

அரச அதிகார பகிர்வு மற்றும் ஜனாதிபதி அவர்களின் நிறைவேற்று அதிகாரம் மற்றும் பாராளுமன்ற சட்டவாக்க அதிகாரம் என்பன போன்ற அதிகாரங்களை மட்டுப்படுத்துவதன் மூலம் பாராளுமன்ற சட்டவாக்க அதிகாரம் மற்றும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் கைவிடப்படல் என்பன 13 ஆம் திருத்தம் மூலம் மேற்கொள்ளப்பட்டிருப்பதன் காரணமாகவும் ;

இது வரைக்கும் இலங்கை அரசாங்கத்தினால் பிரயோகிக்கப்பட்டு வந்த சட்டம் மற்றும் சமாதானம் பேணப்படல் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரம் என்பன 13 ஆம் திருத்தம் மூலமாக மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்படுவது தேசிய பாதுகாப்பிற்கு பாரதூரமான கெடுதியாக இருப்பது ஏனெனின் :-

(அ) மாகாண முதலமைச்சரின் நிர்வாகத்தின்கீழ் பொலிஸ் படைத் தலைவர் அமைவதன் காரணமாக அதன் மூலம் அந்தப்படை தொடர்பான பொலிஸ் அலுவலர்களும், அந்த மாகாணத்தினுள் செயற்படும் தேசிய பொலிஸ் அலகும் குறித்த அந்த முதலமைச்சரின் நிர்வாகம் மற்றும் கட்டளைக்கு கீழ்வரும் (9 ஆம் அட்டவணை 1ஆம் இணைப்பு 11 இனைப் பார்க்கவும்) இதன் மூலம் பொலிஸ் மா அதிபர் மற்றும் இலங்கை அரசினால் குறித்த அந்த பொலிஸ் படை மீது மேற்கொள்ளப்படும் அதிகார வல்லமை நீக்கம் செய்யப்பட்டுள்ளது ;

(ஆ) அரசியலமைப்புச் சட்டம் 9 ஆம் அட்டவணையில் முதலாம் இணைப்பு உப அட்டவணையில் காட்டப்படும் பிழை, தவிர்ந்த பிழைகள் அனைத்தும் தவிர்க்கப்படல் வெளிக்கொணர்தல் மற்றும் அவைகள் தொடர்பாக விசாரணை செய்தல் என்பன தொடர்பாகவும் குற்றவியல் வழக்கு நடைமுறைச் சட்டத்தின் பிரகாரம் சட்டமா அதிபரின் வல்லமைகளுக்குக்கீழ் அக்குற்றங்கள் தொடர்பாக குறித்த நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்தல் தொடர்பாகவும், அவ்வாறான விடயங்கள் தொடர்பாக சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும், வேறொரு மாகாண பொலிஸ் அலுவலர் ஒருவர் அந்த மாகாணத்தினுள் நுழைவதனைத்

தடுப்பதற்கும் (9 ஆம் உப அட்டவணை இரண்டாம் ஆவணம் இரண்டாம் விடயம் (ஓ) உப பந்தியைப் பார்க்கவும்) 13 ஆம் திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்குப் பொறுப்புக்கள் கையளிக்கப்படுவதினால் குடியரசின் சட்டம் மற்றும் சமாதானம் பேணப்படல் மற்றும் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது ;

(இ) அரசியல் அமைப்புச் சட்டத்தின் 9 ஆம் அட்டவணை முதலாம் இணைப்பில் காட்டப்படுகின்ற உப அட்டவணை 12:1 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 11:1 விடயத்திற்கேற்ப தேசிய பொலிஸ்படை ஒருவர் மாகாணம் ஒன்றிற்குள் தமக்கு வழங்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புக்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களிலெனினும் சீருடை அணிவதனைக் கட்டுப்படுத்த சாதாரண உடையில் இருப்பதற்கும் 13ஆம் அரசியல் அமைப்புத் திருத்தம் மூலம் குறிப்பிடப் பட்டுள்ளது .

13 ஆம் அரசியல் அமைப்புத் திருத்தம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டக் கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டிருப்பினும், ஏதேனுமொரு மாகாணம் குடியரசிற்கு எதிராக செயல்புரியும்போது இலங்கை அரசாங்கத்தினால் அதில் தலையீடு புரியும் சட்ட அதிகாரங்கள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்பதுடன் இந்திய அரசியல் அமைப்பின் 256 மற்றும் 257 ஆம் பிரிவுகளின்கீழ் அவ்வாறான ஏற்பாடுகள் போதுமான அளவில் மேற்கொள்ளப்பட்டிருப்பதனாலும் :

அரசியல் அமைப்பின் 154 (ஓ) மற்றும் 154(ஓ) உறுப்புரைகளின் பிரகாரம் மாகாணங்களினால் நிறைவேற்று அதிகாரங்கள் பிரயோகிக்கப்பட வேண்டிய விதம் பற்றி ஆணை பிறப்பிப்பதற்கு மத்திய அரசிற்கு இருக்கும் அதிகாரம் அத்தியாவசிய வழங்கல் மற்றும் சேவைகள் என்பன பேணப்படலுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருத்தல் அல்லது யுத்தம் ஒன்று அல்லது வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதப்புரட்சியொன்று காரணமாக இலங்கையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் நேர்ந்துள்ளமை

போன்ற சந்தர்ப்பங்களுக்கு மட்டுப்படுத்தியிருப்பினும் இந்திய அரசியல் அமைப்பில் அவ்வாறான கட்டுப்பாடுகள் இல்லாதிருப்பதன் காரணத்தினாலும் :

13 ஆம் அரசியல் அமைப்புத் திருத்தம் மூலமாக இலங்கை அரசாங்கத்தின் வல்லமை குறைக்கப்பட்டு மாகாண சபைகள் பலப்படுத்தப்பட்டு அதன்மூலம் நாட்டின் ஒருமைப்பாடு இலங்கையின் தேசிய பூரணத்துவம் மற்றும் நாட்டு மக்களினது சுயாதீனத்துவம் என்பன சிதறடிக்கப்படுவதன் காரணத்தினாலும்:

இலங்கை சுதந்திர, தன்னாதிக்க, சுயாதீன மற்றும் தனியொரு நாடொன்றாகும் என்பதுடன் இலங்கையின் சுதந்திரம், தன்னாதிக்கம், சுயாதீனத்துவம் மற்றும் தேச பூரணத்துவம் என்பவற்றினைப் பாதுகாத்தல் அரசாங்கத்தின் பொறுப்பாகும். எனினும் 13 ஆம் அரசியல் அமைப்புத் திருத்தம் இலங்கையின் குறித்த அந்த தன்னாதிக்கம், சுயாதீனத்துவம் மற்றும் தேச பூரணத்துவம் என்பனவற்றிற்கு அச்சுறுத்தல் என்பதனாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**2**. இதன்பின்னர் அரசியல் அமைப்புச் சட்டம் என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்புச் சட்டத்தால்,

அ. 154 (அ) முதல் 154 (ண) வரைக்குமான அரசியல் அமைப்பு பந்தி (Chapter xviiA)

ஆ. 155 (3அ) உறுப்புரை

இ. 9 ஆம் உப அட்டவணை

என்பன இரத்துச் செய்யப்பட்டு அரசியல் அமைப்புச் சட்டம் இத்தால் திருத்தம் செய்யப்படுகிறது.

**3**. அரசியல் அமைப்புச் சட்டத்தின் 170 ஆம் உறுப்புரையில் “எழுத்துமூலமான சட்டம்” என்பதன் பொருள்கோடலில்–

“மாகாண சபை ஒன்றினால் உருவாக்கப்பட்ட வரைவு நியதிச் சட்டம் அல்லது ஏதேனும் ஒரு சட்டத்தின்கீழ்” என்ற சொல்லிற்குப் பதிலாக, “ஏதேனுமொரு சட்டத்தின்கீழ்” என்ற வசனம் மாற்றீடு செய்யப்பட்டு குறித்த அரசியல் அமைப்பு இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்